# சமூக இழிவு ஒழிப்பு மாநாட்டு பிரகடனம்

ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களான, சக்கிலியர்கள் என்றழைக்கப்படும் ஆதித்தமிழர்களான நாங்கள், முப்பது நூற்றாண்டுகளாக, முடைநாற்றமெடுத்துப்போன இந்துத்துவ சாதிய சமூக அமைப்பில், வருணாசிரம முறையை எதிர்த்துக் கலகம் செய்ததால், வருணத்திலிருந்து ஒதுக்கப்பட்டு, வருணசாதி நெறிமுறைக்கு எதிராக கலகம் செய்ததற்கு பரிசாகவும், தண்டனையாகவும், இழிதொழில்களான, மலம் அள்ளுவது, பழைய செருப்பு தைப்பது, இழவு சொல்வது, பழைய சோறு வாங்குவது உள்ளிட்ட பணிகள் எங்கள் மீது வன்முறையாக திணிக்கப்பட்டு செய்து வந்தோம்.

காலம் காலமாக, இந்துதுவ சாதிய சமூக அமைப்பை எதிர்த்து வாழ்நாள் முழுதும் போராடிய புரட்சியாளர் அம்பேத்கர், கலகக்காரர் பெரியார் வழியில் இருபெரும் தலைவர்களும் இந்திய துணைக்கண்டத்தில் அமைக்க விரும்பிய சாதியற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில், சாதி ஒழிப்புக்கு தீண்டாமை ஒழிப்பு முன் நிபந்தனை, தீண்டாமை ஒழிப்புக்கு தாழ்த்தப்பட்டோர் விடுதலை முன் நிபந்தனை, தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கு ஆதித்தமிழர்களின் விடுதலை முன் நிபந்தனை, ஆதித்தமிழர்களின் விடுதலைக்கு இழிப்பு முன் நிபந்தனை என்கிற அம்பேத்கரியலின் கோட்பாட்டை புரிந்து, ஏற்றுகொண்டு, நடைமுறைப்படுத்தும் வகையில், இழிதொழில்களை அரசு தடை செய்யும் வரையில் பொறுத்துக்கொண்டு இருக்காமல், இழிவான தொழில்களை இனிமேல் நாங்கள் செய்ய மாட்டோம் என இம்மாநாட்டின் வாயிலாக பிரகடனம் செய்கிறோம்.

26.12.2010.

ஆத்தூர்.